**மஹவ பிரதேச சபை**
**குருநாகல் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 29 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 யூன் 15 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 15 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மஹவ பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்குகளைச் சமர்ப்பித்தலில் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 94,835,651 தொகையான நிலுவை மூலதன மானியங்கள் மீதிகளில் ரூபா 17,195,852 தொகை முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் 46 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் திரண்ட நிதியத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்கொடுத்தோர் மீதிகளில் நிர்மாணக் கடன்கொடுத்தோர் ரூபா 1,422,633 தொகை மற்றும் பொது வழங்கல் கடன்கொடுத்தோர் ரூபா 849,051 என ரூபா 2,271,684 தொகை உரிய அங்கீகாரமின்றி 44 மற்றும் 41 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் திரண்ட நிதியத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 நவம்பரில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஊழியர்களுக்குரிய மீளாய்வாண்டின் இறுதி வரையில் கிடைக்க வேண்டிய ரூபா 11,003,107 ஆன சம்பள மீள் நிரப்பல்களின் பெறுமதி ரூபா 10,775,484 ஆக கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் கடன்பட்டோர் ரூபா 227,623 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2014 நவம்பர் முதல் சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட 16 முன்பள்ளி பாடசாலை காப்பாளர்களுக்குரிய 2015 சனவரி முதல் நவம்பர் வரையான காலப்பகுதிக்குரிய சம்பளம் மீளாய்வாண்டினுள் செலுத்தப்படாதிருந்ததுடன், அப்பெறுமானம் கடன்கொடுத்தோராக இனங்காணப்படாமல் கணக்கீடு செய்யப்படாதிருந்த

காரணத்தினால் ஆண்டின் செலவினம் மற்றும் கடன்கொடுத்தோர் என்பன ரூபா 5,398,952 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணங்களின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் எதிர்வரும் ஆண்டிற்காக கிடைத்த ரூபா 321,269 வீதவரி வருமானம் முற்கொடுப்பனவாக கணக்கீடு செய்யப்பட்டதன் பேரில் ஆண்டின் வருமானம் அப்பெறுமதியால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 2015 யூன் முதல் ஒக்தோபர் வரை 05 மாத காலப்பகுதிக்குரிய 2015 திசெம்பர் மாதம் நேரடியாக அனுப்பிவைக்கப்பட்ட பெக்கோ இயந்திர வாடகை ரூபா 875,000 தொகை பாதை தகர்க்கும் வாடகை வருமானமாக கணக்கீடு செய்யப்படாமை மற்றும் 2015 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்குரிய கிடைக்க வேண்டிய ரூபா 350,000 பாதை தகர்க்கும் வாடகை கடன்பட்டோராக கணக்கீடு செய்யப்படாததன் பேரில் ஆண்டின் வருமானம் ரூபா 1,225,000 ஆல் குறைத்தும் கடன்பட்டோர் ரூபா 350,000 குறைத்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் மஹவ வலயத்தின் நிலுவை நீர் வருமானம் ரூபா 85,565 ஆன மீதி நிலுவை வருமானமாக கணக்கீடு செய்யப்படாதன் காரணமாக ஆண்டின் வருமானம் மற்றும் கடன்கொடுத்தோர் அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டினுள் நன்கொடையாக ரூபா 26,980,000 ஆன இயந்திர உபகரணங்கள் மற்றும் ரூபா 10,900,000 ஆன மோட்டார் வண்டி என்பவற்றின் பெறுமதி மூலதன வருமானம் மற்றும் செலவினமாக கணக்கீடு செய்யப்படாததன் பேரில் ஆண்டின் வருமானம் மற்றும் செலவினம் ரூபா 37,880,000 வீதம் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டிற்குரிய உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்தின் பங்களிப்புத் தொகை ரூபா 97,660 ஆக இருந்த போதிலும், ரூபா 65,107 ஆண்டின் செலவினமாக காண்பிக்கப்பட்டதன் பேரில் ஆண்டின் செலவினம் ரூபா 32,553 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டிற்கான இறுதியில் கீழ் 04 கணக்கு விடயங்களில் காணப்பட்ட மீதிகள் மற்றும் தொடர்புடைய பதிவேடுகளுக்கிடையே ரூபா 682,003 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டன.

### 1.3.4 பெறவேண்டிய கணக்குகள்

(i) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 72,294,745 ஆக இருந்ததுடன், அவற்றில் தகவல்கள் சமர்ப்பிக்கப்படாத ரூபா 60,967,343 தொகையில் ரூபா 64,424 தொகை 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதிகளைக் கொண்டிருந்தன.

(ii) பெறவேண்டியவற்றில் நீண்டகாலமாக காணப்படும் தகவல்கள் சமர்ப்பிக்கப்படாத ரூபா 6,098,770 ஆன முற்பண மீதிகளும் 2000 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் காணப்படும் ரூபா 569,208 ஆன பொது முற்பண மீதியொன்றும் வருடக் கணக்காக முன்கொண்டு வரப்படும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பெயரில் காணப்பட்ட ரூபா 761,854 ஆன மீதியும் காணப்பட்டன.

### 1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

(i) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 72,693,577 ஆக இருந்ததுடன் தகவல்கள் சமர்ப்பிக்கப்படாத ரூபா 61,436,156 இற்குரிய தொகையில் ரூபா 54,857 தொகை 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதிகளைக் கொண்டிருந்தன.

(iii) செலுத்த வேண்டிய கணக்குகளினுள் நீண்டகாலமாக காணப்படும் உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 3,930,686 ஆன மீதியொன்றும் காணப்பட்டது.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 63,672,279 பெறுமதியான 03 கணக்கு விடயங்கள் உருவாகிய விதம் காண்பிக்கப்படுகின்ற அட்டவணைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் அக்கணக்கு விடயங்கள் தொடர்பாக விரிவான பரிசோதனைகளை மேற்கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் மீதி ரூபா 6,195,327 ஆக இருந்ததுடன் அவை உருவாகிய விதம் காண்பிக்கப்படுகின்ற அட்டவணைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 14,563,744 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு ரூபா 1,208,661 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 15,772,405 ஆன அதிகரிப்பொன்று காணப்பட்டது. இந்த நிதி விளைவிற்கு ரூபா 3,695,101 ஆன மூலதன உதவி மற்றும் ரூபா 13,533,537 ஆன மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவு ரூபா 4,725,308 ஆன மிகையொன்றாக மாறியிருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் உரிய முரண்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமானம் | | | | செலவினம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | 2015 | 2014 | முரண் | செலவின விடயம் | 2015 | 2014 | முரண் |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | உழைத்த வருமானம் | 19,579 | 17,948 | 1,631 | தனிப்பட்ட வேதனம் | 55,034 | 41,087 | 13,947 |
| (ii) | ஏனையவை | 70,415 | 45,618 | 24,797 | ஏனையவை | 20,396 | 23,688 | (3,292) |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | - |
| | உப மொத்தம் | 89,994 | 63,566 | 26,428 | உப மொத்தம் | 75,430 | 64,775 | 10,655 |
| (iii) | மூலதன வருமானம் | 3,695 | 98,159 | (94,464) | மூலதன செலவினம் | 13,534 | 90,751 | (77,217) |
| | மொத்தம் | 93,689 | 161,725 | (68,036) | மொத்தம் | 88,964 | 155,526 | 66,562 |
| | செயற்பாட்டு விளைவு | 14,564 | (1,209) | 15,773 | மிகை | 4,725 | 6,199 | (1,474) |

(ஆ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமான ரூபா 89,994,302 தொகையில் அண்ணளவாக 78 சதவீதமானவை அதாவது ரூபா 70,415,640 தொகையும் சபையினால் உழைத்த வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற தன்மையுள்ள பெறுவனவுகளினை அடங்கியுள்ளது. அதே போல் மூலதன வருமானமாகிய ரூபா 3,695,101 ஆன மொத்தத் தொகையும் வேறு நிறுவனங்களின் மூலம் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்காக கிடைக்கப்பெற்ற பணத்தினை அடங்கியுள்ளது.

(இ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவினமான ரூபா 75,430,558 தொகையில் 73 சதவீதமான அதாவது ரூபா 55,034,159 தொகை தனிப்பட்ட சம்பளத்திற்காக செலவிடப்பட்டிருந்ததுடன் அவற்றில் 96 சதவீதமான ரூபா 53,107,343 ஆன சம்பள மீளளிப்பாக உள்ளூராட்சி மன்ற ஆணையாளரினால் வழங்கப்பட்டிருந்துடன் அப் பெறுமதி ஏனைய வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மூலதனச் செலவினமான ரூபா 13,533,537 தொகையில் 39 சதவீதமான தொகையில் அதாவது ரூபா 5,249,416 சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்ததுடன் எஞ்சிய மீதி 61 சதவீதம் அதாவது ரூபா 8,284,121 தொகை பிரதேச சபையைப் பலப்படுத்தல், உள்ளூராட்சி முதலீடு போன்ற மூலங்களின் பேரில் வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி விடயங்களை அடங்கியுள்ளது.

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

**(அ) மதிப்பிடப்பட்ட வருமானமும் உள்ளபடியான வருமானமும்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் நிலுவை வருமானம் என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015 மதிப்பிடப் பட்டது | 2015 உள்ளவாறான | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய பற்றாக்குறை | 2014 மதிப்பிடப் பட்டது | 2014 உள்ளவாறான | 2014 திசெம்பர் 31 இல் உள்ளாறு திரட்டிய பற்றாக்குறை |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) வீதவரியும் வரியும் | 5,830 | 4,977 | 2,801 | 5,467 | 3,958 | 2,118 |
| (ii) குத்தகை வாடகை | 8,575 | 9,809 | 333 | 7,613 | 8,436 | 338 |
| (iii) அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 771 | 503 | - | 650 | 656 | - |
| (iv) ஏனைய வருமானம் | 79,433 | 74,705 | 14,776 | 54,504 | 50,514 | 17,339 |
| மொத்தம் | 94,609 | 89,994 | 17,910 | 68,234 | 63,564 | 19,795 |

## 2.3.2 பட்டியலிடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015/01/01 இல் நிலுவை | ஆண்டில் பட்டியலிட்டது | மொத்தம் | 2015/01/01 இல் நிலுவை | வருமான சேகரிப்பு பட்டியிலிடப்பட்ட வருமானத்தில் சேகரித்த வருமானம் | மொத்தம் | 2015/01/01 இல் நிலுவை | நிலுவை மீதி பட்டியிலிடப்பட்ட வருமானத்தில் சேகரித்த வருமானம் | 2015/12/01 இல் நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா. 000 | | | | | | | | |
| வீதவரி மற்றும் வரி(10) | 2,118 | 4,977 | 7,095 | 625 | 3,669 | 4,294 | 1,493 | 1,308 | 2,801 |
| வாடகை (20) | 338 | 9,809 | 10,147 | 11 | 9,803 | 9,814 | 327 | 6 | 333 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் (30 | - | 502 | 502 | - | 502 | 502 | - | - | - |
| ஏனைய வருமானம் (40,50,60,70) | 17,339 | 74,705 | 92,044 | 25,609* | 60,691 | 86,300 | 762 | 14,014 | 14,776 |
| மொத்தம் | 19,795 | 89,993 | 109,788 | 26,245 | 74,665 | 100,910 | 2,582 | 15,328 | 17,910 |

* 2014 ஆம் ஆண்டில் ரூபா 9,032,000 ஆன முத்திரைக் கட்டண வருமானங்கள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணங்களாக கணக்கீடு செய்யப்படாமையின் பேரில் நிலுவை பெறுவனவுகளின் அதிகரித்திருந்தது.

## 2.3.3 வீதவரி

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை வீத வரி ரூபா 2,797,993 ஆகக் காணப்பட்டதுடன் அது வருடாந்த பட்டியலிடலில் ரூபா 2,451,538 தொகையில் 114 சதவீதமாக இருந்தது. 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 32 - 42 வரை விதிகளின் பிரகாரம் காலாண்டை அடிப்படையாகக் கொண்டு நிலுவை பட்டோலை தயாரித்து குறிப்பிட்ட அறிவித்தல் வழங்கிய பின்னர் ஆதனங்களை தடைசெய்து நிலுவை வீதவரி அறவீடு செய்யும் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 குத்தகை வாடகை

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை வீதவரி மீதி ரூபா 289,926 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 284.481 தொகை 2013 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து காணப்படும் மீதிகளாக இருந்ததுடன் உரிய மீதிகளை அறவிடுவதற்காக பிரதேச சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நீண்டகால குத்தகைக்கு வழங்குதல் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 42,918 தொகை 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய நிலுவையாக இருந்ததுடன் நிலுவைகளை அறவிடுவதற்கு மறையான நடைமுறைக் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய நிறுவனங்கள் தொடர்பான கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு அந்நிறுவனங்கள் இனங்காணப்பட்டு பதிவேடுகளுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக 2014 ஆம் ஆண்டில் கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு ரூபா 250,065 தொகையான அனுமதிப்பத்திர வருமானம் பெற்றுக்கொள்ளப்பட்ட போதும் 2015 ஆம் ஆண்டில் அது ரூபா 206,550 வரை ரூபா 43,516 ஆல் குறைவடைந்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டில் சுற்றுலா சபை அதிகாரச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஹொட்டெல்களில் மொத்த விற்பனையில் ஒரு சதவீதம் அறவிடுவதற்கு உபவிதியொன்று விதிக்கப்பட்ட போதிலும் அந்த ஒரு வீத வரியை அறவிடும் போது அவ்வியாபாரங்களின் மொத்த விற்பனைகளை உறுதிப்படுத்துவதற்காக நிதிக்கூற்றுக்களில் முறையான உறுதிப்படுத்தலொன்று பெற்றுக்கொள்ள முடியவில்லை.

### 2.3.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,752,375 ஆக இருந்ததுடன் முத்திரைக் கட்டண அளவு இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 உறுப்பினர் முன்மொழிவின் பேரில் மாகாண சபை நிதியத்திலிருந்து செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 78,255 பெறுமதியான 141 பிளாஸ்ரிக் கதிரைகள் நலன்புரி சங்கங்களுக்கு பகிரப்படாமல் சபையிடம் காணப்பட்டது.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தினுள் மயானத்தைச் சுற்றியுள்ள காணியில் வேலியை அமைப்பதற்காக ரூபா 471,000 அளவில் சபை நிதியத்தலிருந்து செலவிடப்பட்டு 6 அடி கம்பித் தூண்கள் 300 உம் 5 ½ அடி கம்பித் தூண்கள் 500 உம் 2015 திசெம்பர் மாதம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அம் மயானத்திற்கான வேலியை அமைப்பதற்கு இத்தூண்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. 6 அடி கம்பித் தூண்கள் 195 உம் 5½ அடி கம்பித் தூண்கள் 74 உம் உரிய நோக்கத்திற்குப் புறம்பாக வேறு செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் ஓராண்டிற்கு அண்மித்த காலமாக உரிய

செயற்பாட்டிற்குப் பயன்படுத்தப்படாமல் 531 கம்பித் தூண்கள் அளவில் சபை யில் குவித்து வைக்கப்பட்டிருந்தது.

### 3.2 மாங்கன்று பகிர்தல்

-------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2015ஜனவரி 23 ‘‘பயிர் நடுவோம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்’’ திட்டத்தின் கீழ் மாங் கன்றுகளை விநியோகிப்பதற்காக 2015 ஏப்ரல் மாதம் 01ஆம் திகதி ரூபா 177,500 செலுத்தி 1250 மாங்கன்றுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததோடு, கொள்வனவு செய்யப்பட்ட மாங்கன்றுகளில் 200 கன்றுகள் தலைவர் அவர்களுக்கும் 100 கன்றுகள் ஒரு சபை அங்கத்தவருக்கும் ஏனைய சபை அங்கத்தவர்கள் 16 பேருக்கும் 50 கன்றுகள் வீதமும் ரூபா. 156,200 பெறுமதியான 1100 மாங்கன்றுகள் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்டதன் அடிப்படை மற்றும் அக் கன்றுகள் பிரதேசவாசிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டமைக்கான எழுத்து மூலமான சான்றுகள் கணக்காய்வின் போது சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) இத் திட்டம் முறையான திட்டமிடலின் கீழ் செயற்படுத்தப்படாமையினால் கொள்வனவு செய்யப்பட்ட மாங்கன்றுகளில் ரூபா 21,300 பெறுமதியான 150 கன்றுகள் எஞ்சியிருந்ததோடு அவற்றில் ரூபா 9,940 பெறுமதியான 70 கன்றுகள் 2015 பெப்ரவரி மாதம் சியோதாகம திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு வழங்கப்பட்ட கன்றுகளில் ரூபா 3,408 பெறுமதியான 24 கன்றுகள் கணக்காய்வுத் தினம் வரையிலும் நடப்படாமலிருந்ததோடு ரூபா 1,562 பெறுமதியான 11 கன்றுகள் இறந்து காணப்பட்டன. நடப்பட்டிருந்த 46 கன்றுகளில் ரூபா 4,260 பெறுமதியான 30 கன்றுகள் வரட்சி காரணமாகவும் பொருத்தமற்ற பூமியில் பயிரிடப்பட்டதன் காரணமாகவும் இறந்து காணப்பட்டன. மீதமிருந்த ரூபா 11,360 பெறுமதியான 80 கன்றுகள் 2015 ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி சபை ஊழியர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

### 3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்காக ரூபா 3,147,174 தொகை நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், பெற்றுக்கொண்டிருந்த நீர் முறைப்படி ஈடுபடுத்தப்பட்டதா என்பது கணக்காய்வின் போது இனங்காண முடியாதிருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டிற்காக சபைக்குச் சொந்தமான பலள்ள ஞாயிறு வாரச்சந்தை, மஹவ சனிக்கிழமை வாரச்சந்தை மற்றும் நாகொல்லாகம வெள்ளிக்கிழமைச் சந்தை மற்றும் அம்பன்பொல திங்கள் சந்தை என்பன முறையே வருடாந்தம் ரூபா 386,500, ரூபா 4,302,000, ரூபா 1,903,400, ரூபா 1,903,400 மற்றும் ரூபா 2,009,000 ஆன வாடகையில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், குத்தகையாளரால் கட்டணங்கள் அறவிடப்பட்ட முறை தொடர்பாக அறிவுறுத்தல்கள் அல்லது வழிகாட்டல்கள் உள்ளடக்கப்பட்ட உடன்படிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் குத்தகையாளரால் அசாதாரண முறையில் கட்டணங்கள் அறவிடப்பட்டதா என்பது தொடர்பாக சபை மேற்பார்வை செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

04 நிறுவனங்களிடமிருந்து கூறுவிலை கோரப்பட்டு ரூபா 52,500 பெறுமதியான 80 தினக் குறிப்பேடுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்காக கேள்வி சபை தீர்மானமொன்றோ அல்லது சபை தீர்மானமொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் தினக் குறிப்பேடுகள் கொள்வனவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டும் உறுதிச்சீட்டுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நாகொல்லாகம பொது நூலக கட்டிட நிர்மாணம் கட்டம் - III

பொது நூலகக் கட்டிட நிர்மாணத்தின் iii ஆம் கட்டத்திற்காக ஒப்பந்தக்காரரோடு ரூபா 975,000 பெறுமதிக்கு 2015 ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்தது. இறுதிக் கொடுப்பனவு அறிக்கையின் 4 மற்றும் 5 ஆகிய விடயங்களின் கீழ் கலர் பொன்ட் சின்க் அலுமினியம் இபாஜ் போட் மற்றும் கூரை பீலி ஆகியன கொள்வனவு செய்து பொருத்துவதற்காக 77.8 மீற்றருக்கு ரூபா 73,229 செலுத்தப்பட்டிருந்த போதும் 2016 பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி நடைபெற்ற நிலையப் பரிசோதனையின் போது கூரைப் பீலி மற்றும் வடிம்பு ஆகியன சந்திக்கின்ற 04 மூலைகளில் 02 இல் அலுமினியம் தகரம் உடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. ஒரு மூலையில் இரண்டு பக்கங்களிலிருந்தும் வருகின்ற வடிம்பு மற்றும் கூரைப் பீலி ஆகியன ஒன்று சேராதிருந்ததன் காரணமாக சுமார் 5 அங்குலமான இடைவெளி ஏற்பட்டிருந்தது. மேலும்

இறுதிக் கொடுப்பனவு அறிக்கையின் 10 ஆவது விடயத்தின் கீழ் அறிவுறுத்தலின் படி அத்திவாதத்திற்கும் கட்டிடத்தின் சுற்றுப்புறத்திற்கும் மண் இட்டு பதப்படுத்துவதற்காக ரூபா 1,788 வீதம் 54.0 கன மீற்றருக்கான கொடுப்பனவாக ரூபா 96,552 செலுத்தப்பட்டிருந்த போதும் நிலையப் பரிசோதனையின் போது மண் நிரப்பப்படாமையும் பதப்படுத்தப்படாமையும் அவதானிக்கப்பட்டது.

**(ஆ) வலஸ்வெவ கிராம கம்மெத வீதி மோட்டார் கேடர் செய்து குருணிக் கற்கள் இடல்.**

மூனமலேகம சன சமூக நிலையத்தினால் மேற்குறிப்பிட்ட கட்டடத்தை நிர்மாணிப்பதற்காக 2015 செப்டம்பர் மாதம் 25 ஆம் திகதி ரூபா 250,000 ஒப்பந்தப் பெறுமதிக்கு 03 மாதங்களில் நிறைவு செய்வதென ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. எனினும் சன சமூக நிலையத்தின் பண ஆற்றல் தொடர்பாக கவனம் செலுத்தப்படாமல் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2016 பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி கணக்காய்வுத் தினத்தின் போது 05 மாதங்கள் கடந்திருந்த போதும் குறிப்பிட்ட பாதை மோட்டர் கிரேடர் மாத்திரமே செய்யப்பட்டிருந்தது. மோட்டர் கிரேடர் செய்யப்பட்டிருந்த போதும் நீர்ப்பாசன சபையினால் நீர்க் குழாய்கள் பொருத்துவதற்காக மோட்டர் கிரேடர் செய்யப்பட்டிருந்த வடிகாண்கள் மீண்டும் தோண்டப்பட்டு அகற்றப்பட்ட மண் பாதையின் இரு மருங்கிலும் குவிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வுத் தினம் வரை கட்டிட நிர்மாண வேலைகள் முடங்கிக் கிடந்ததன் காரணமாக ஒப்பந்தத்தில் குறிப்பிட்டவாறு வேலைகள் முடிக்கப்படாததால் வேலையை முடிக்கும் பிணை அரசமயப்படுத்தப்பட்டு ஒப்பந்தக்காரருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) முற்பணங்களை தீர்வுசெய்யாமை**

அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 5.4.4 இன் பிரகாரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய பாதுகாப்பு பிணையொன்றின் பேரில் ஒப்பந்த தொகையில் கூடியது 20 சதவீதம் முற்பணமாக வழங்க முடியுமான போதிலும், எவ்வித பிணையொன்றுமில்லாமல் சபையினால் 2014 ஆம் ஆண்டில் 75 நிர்மாண வேலைகளுக்காக ஒப்பந்தக்காரருக்கு ரூபா 9,739,751 முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது.

10 ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,362,910 தொகையான முற்பணத் தொகையை ஒப்பந்தக்கார்களால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.6 திண்மக் கழிவு முகாமைத்துவம்

சபையினால் 2 ஏக்கர் காணியில் 06 ஊழியர்களை ஈடுபடுத்தி சேகரிக்கப்பட்ட 03 தொன் அளவிலான கழிவுப்பொருட்களை முகாமை செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், குப்பைகளை வேறாக்கும் இடத்திற்கு மேவுகையொன்று அமைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் நாளாந்தம் சேரும் குப்பைகளை வைப்பதற்கு தற்போது காணப்படும் கொங்கிரீட் தளம் போதியளவில் இல்லாமையால் உரிய காணியில் முறையற்ற விதத்தில் குப்பை குவிக்கப்பட்டிருந்தமை 2016 பெப்ரவரி 18 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட நிலையப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது.

## 3.7 சுற்றடால் சிக்கல்கள்

வடமேல் மாகாண நீர் வழங்கல் மற்றும் சுற்றாடல் சுகநலன் பிரிவின் மூலம் நிர்மாணித்து 2015 செப்தம்பர் 02 ஆந் திகதி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் நடவடிக்கைகள் சபையினால் 04 மாதங்களின் பின்னர் 2016 சனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதிலிருந்து அகற்றப்படும் நீர் சூழலுக்கு பாதமாக முறையான நடைமுறையொன்றில்லாமல் அருகிலுள்ள குளத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே நீர் சுத்திகரிப்பு அலகிலிருந்து சுத்திகரிக்கப்படும் நீரைக் களஞ்சியப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் தாங்கிக்காக மேவுகையொன்றும் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

# 4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

சபையினால் உழைக்கப்பட்ட வருமானத்தின் கீழ் 02 வரவு விடயங்களின் மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 8,844,000 ஆக இருந்ததுடன் உள்ளவாறான வருமானம் ரூபா 4,792,000 ஆக இருந்தது.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் கூட்டப்படாதிருந்ததுடன் ஸ்தாபிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு பிரிவினால் போதியளவு கணக்காய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கிவல்லை.

**05. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) ஒப்பந்த நிருவாகம்